23-12-2016

தினகரன்

இந்தியாவின் முதுகெலும்பான விவசாயம்; விவசாயிகள் தினம் இன்று ! தினகரனின் வாழ்த்துக்கள்




இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 23-ம் தேதி தேசிய விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் பிறந்த நாளே கடந்த 16 ஆண்டுகளாக விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. சரண் சிங்கின் பிறந்த நாளை விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுவதற்கு காரணங்கள் உண்டு. நெருக்கடியான அரசியல் சூழல்களுக்கிடையே ஜூலை 1979-ம் ஆண்டு, இந்தியாவின் 5-வது பிரதமராக சவுத்ரி சரண் சிங் பதவியேற்றார். பின்னர் 1980-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி வரை 7 மாதங்கள் ஆட்சியில் இருந்த சரண் சிங் ஜமீன்தாரி ஒழிப்புமுறை சட்டத்தை கொண்டு வந்தார். அதேசமயம் நிலச் சுவான்தார்கள், வட்டிக்கு பணம் வழங்குவோர் மீது கடும் எதிர்ப்புகளையும், கண்டனங்களையும், சரண்சிங் தெரிவித்தார்.

சரண் சிங் ஆட்சியின் போதே விவசாயிகளின் விளைபொருள் விற்பனைக்காக 'வேளாண் விளைபொருள் சந்தை மசோதா'வையும் அறிமுகப்படுத்தினார். இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம். உண்மைதான். இன்றும் இந்தியாவின் மக்கள் தொகையில் 60 சதவிகிதத்துக்கு மேலானோர் விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். பல்வேறு துறைகள் வளர்ச்சி அடைந்திருந்தாலும், இந்தியாவில் 70 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பியுள்ளனர். தமிழ்நாட்டில் மொத்தம் சுமார் 130 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு இருக்கிறது.

இதில், 51 லட்சம் ஹெக்டேரில் விவசாயம் செய்யப்படுகிறது. தமிழக மக்களில் சுமார் 55 சதவிகிதம் பேர் விவசாயம் மற்றும் அது தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய காலகட்டத்தில் விவசாயம் நலிவடைந்து வருகிறது. ஏனெனில், விளை நிலங்கள் அனைத்தும் வீடு கட்டுவதற்கு பிளாட்டுகளாக மாறி வருகிறது. அதனால், எதிர்கால தலைமுறைகளை கருத்தில் கொண்டு விவசாயத்தை விரிவுபடுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். குறிப்பாக, இளைஞர்களிடையே விவசாயத் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்ற சூழல் உருவாகியுள்ளது.

இந்தியாவில் 2009ஆம் ஆண்டில் நடந்த தற்கொலையில், 62 சதவிகித விவசாயிகளும், 2010ஆம் ஆண்டில் நடந்த தற்கொலையில் 66.49 சதவிகித விவசாயிகள் என்று, தேசிய குற்றப் பதிவு அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. நாட்டில் விவசாய தினம் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால் விவசாயத்துக்கோ, விவசாயிக்கோ எந்தவொரு முன்னுரிமையும் எதிர்காலமும் இல்லாமல் இருக்கின்றனர். ஆனால் இன்னும் விவசாயம் ஆட்சியாளர்களுக்கு முதன்மை துறையாக இல்லாதிருப்பது வருத்தத்தை அளித்து வருகிறது.

## டி.புதுப்பாளையத்தில் சிறப்பு கிராமசபை கூட்டம்

விக்கிரவாண்டி : விக்கிரவாண்டி அருகே டி.புதுப்பாளையம் கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் தணிக்கை குறித்து சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது. ஒன்றிய சமூக தணிக்கை ஒருங்கிணைப்பாளர் கோதை நாயகி தலைமை தாங்கினார். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜூலியான முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் கணபதி வரவேற்றார்.

இதில் கிராமத்தில் 2013-2014, 2014-2015 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் செய்யப்பட்ட வேலையின் அளவு, மற்றும் வழங்கப்பட்ட கூலி போன்றவற்றை தணிக்கை செய்து பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு விளக்கமளித்தனர். இதில் முன்னாள் ஊராட்சி தலைவர்கள் ஜனார்த்தனன், செல்வநாதன், துணை தலைவர் ஜெயபால் உட்பட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## இயற்கை வேளாண்மை பயிர் சாகுபடி பயிற்சி

தர்மபுரி: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை வேளாண்மை பயிர் சாகுபடி பயிற்சி இன்று (23ம் தேதி) நடக்கிறது.இது குறித்து பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம் வெளியிட்ட அறிக்கை: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தேசிய விவசாயிகள் தினம் இன்று (23ம் தேதி) கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, இயற்கை முறையில் பயிர் சாகுபடி பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. பாதுகாப்பான உணவு உற்பத்தி, இயற்கை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள், விதை நேர்த்தி, மண்வள பாதுகாப்பு, இயற்கை உரங்களின் பயன்பாடு, பயிர் வளர்ச்சி ஊக்கிகள் தயாரித்தல் அவற்றை பயன்படுத்துதல், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் இதில் பங்கேற்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## காபி பழங்களை ருசிக்கும் யானைகள்

கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் சுமார் 4,500 ஏக்கரில் காபி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது காபி தோட்டங்களில் ரோபஸ்டா (மர) வகை காபி பழங்கள் பழுக்க துவங்கி உள்ளன. இந்த பழங்களை யானைகள் ரசித்து, ருசித்து சாப்பிடும். பழங்களை சாப்பிட காபி தோட்டங்கள் நிறைந்த குரங்குமுடி, வறட்டுப்பாறை, சங்கிலிரோடு உள்ளிட்ட பகுதிகளில் காட்டு யானைகள் தொடர்ந்து முகாமிட்டு வருவதுடன் ஒரு சில இடங்களில் பழங்களை சாப்பிட்டு சென்றுள்ளது.

காபி பழ மகசூல் பாதிப்படைந்ததை அறிந்த தோட்ட அதிபர்கள், தொடர்ந்து யானைகள் காபி பழ வேட்டையில் ஈடுபடவாய்ப்பு உள்ளதால், அவற்றை பறிக்கும் பணியை துரிதப்படுத்தி உள்ளனர். ரோபஸ்டா வகை காபி பழங்கள் பாலீஷ், சாயம், பெயின்ட் தயாரிக்க பயன்படுகிறது. எனவே இவை கிலோ ரூ 50 முதல் 60 வரை விலைபோவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

## பனிப்பொழிவால் முருங்கைக்காய் விலை உயர்வு

போச்சம்பள்ளி: போச்சம்பள்ளி பகுதியில் கடும் பனிப்பொழிவால் முருங்கைக்காய் விலை உயர்ந்துள்ளது. போச்சம்பள்ளி பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால், முருங்கை மரத்தில் பூக்கள் உதிர்ந்து உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் முருங்கைக்காய் விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் 20 காய்கள் கொண்ட ஒரு கட்டு ₹60 முதல் ₹75 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. தற்போது, விளைச்சல் குறைவால் ஒரு கட்டு ₹100 முதல் ₹150 வரை விலை உயர்ந்துள்ளது.

## கரூரில் ஆர்ப்பாட்டம் மானியத்துடன் தொழில் தொடங்க 115 பேருக்கு கடன் வழங்க இலக்கு

கரூர்: கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 115 பேருக்கு தொழில் தொடங்க கடனுதவி வழங்கி ரூ.57.50 லட்சம் மானியத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.தமிழக அரசு படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் மானியத் தொகையுடன் வங்கி கடன் உதவி மூலம் சுயதொழில் துவங்க ஏதுவாக வேலையில்லாத இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நடப்பாண்டிலும் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இதில் பயன்பெற விண்ணப்பதாரருக்கு 18வயது நிரம்பியிருக்க வேண்டும். குறைந்தபட்ச கல்வித்தகுதி 8ம்வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 35, சிறப்பு பிரிவினருக்கு 45வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.50 லட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும். தொழில்துவங்க அனைத்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார் வங்கிகள், தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது.

தற்போது இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி தொழிலுக்கான திட்ட முதலீடு தொகை ரூ.5லட்சமாக இருந்ததை ரூ.10 லட்சமாக உயர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சேவை தொழிலுக்கு அதிகபட்சமாக ரூ.3 லட்சம், வியாபார தொழிலுக்கு அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரையிலும் கடன் உதவி வழங்கப்படும். இத்தொகையில் விளிம்பு தொகையாக பொதுப்பிரிவினர் 10சதவீதம், சிறப்பு பிரிவினருக்கு 5 சதவீதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மானியத் தொகை அனைத்து பிரிவினருக்கும் திட்ட முதலீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ.1.25 லட்சம் ஆகும். தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு 7நாட்கள் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின்கீழ கடன்பெற விரும்பும் தொழில் முனைவோர்கள் மாவட்ட தொழில் மையத்தின் வாயிலாக யுஒய்ஜிபி திட்டத்தில் உற்பத்தி, சேவை தொழில், வியாபாரம் ஆகிய தொழில்களுக்கு 25சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 லட்சம் அரசு மானியத்துடன் கூடிய திட்டத்தின் கீழ் இணைந்து கடன் பெறலாம். கரூர் மாவட்டத்தை பொறுத்தவரை 2016-17ம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கான இலக்காக 115 பேருக்கு தொழில் துவங்க ரூ.57.50 லட்சம் மானியம் இலக்கீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு

மாவட்டதொழில் மைய பொதுமேலாளர் தாந்தோணிமலை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கலெக்டர் கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

## 3,500 மூட்டை பருத்தி ₹65 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல்: நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று பருத்தி ஏலம் நடைபெற்றது. பல்வேறு பகுதிகளில் இருந்து மொத்தம் 400 விவசாயிகள், 3500 மூட்டை பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இதை ஏலம் எடுக்க திண்டுக்கல், விருதுநகர், ஈரோடு போன்ற பகுதிகளிலிருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். இவர்களது முன்னிலையில் சங்க அலுவலர்கள் ஏலம் நடத்தினர். இதில் ஆர்.சி.எச் ரக பருத்தி ஒரு குவிண்டால் ₹5,113 முதல் ₹5,860 வரையும், டிசிஎச் ரக பருத்தி ஒரு குவிண்டால் ₹6,146 முதல் ₹6,799 வரையும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் 3500 மூட்டை பருத்தி ₹65 லட்சத்துக்கு விற்பனையானது.

## காலிபிளவர் விலை சரிவு

ஊட்டி : காலிபிளவர் விலை குறைந்துள்ளதால், ஊட்டியில் சாலையோர கடைகளில் குறைந்த விலையில் காலி பிளவர்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ் மற்றும் காலிபிளவர் போன்ற மலை காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால், வெளி மாநிலமான கர்நாடகம் மற்றும் கொடைக்கானல் போன்ற பகுதிகளிலும் காலிபிளவர் அதிகளவு பயிரிடப்படுகிறது. இவற்றை காட்டிலும் ஊட்டியில் விளையும் காலிபிளவருக்கு சுவை சற்று அதிகம் என்பதால், விலை அதிகமாக இருந்தாலும் இதனையே பெரும்பாலானவர்கள் விரும்பி வாங்கிச் செல்வது வழக்கம்.

ஆனால், சில சமயங்களில் கர்நாடகத்தில் இருந்து கொண்டு வரப்படும் காலி பிளவர்களால், இங்கு விளையும் காலி பிளவர்களின் விலையிலும் அடி விழுவது வாடிக்கையாக உள்ளது. தற்போது கர்நாடக மாநிலத்தில் காலி பிளவர் மகசூல் அதிகரித்துள்ளதால், ஊட்டிக்கு அதிகளவு கொண்டு வரப்பட்டுள்ளன. பெரும்பாலான சில்லரை வியாபாரிகள் சாலையோரங்களிலும், தள்ளு வண்டிகளிலும் வைத்து விற்பனை செய்கின்றனர். ஒரு காலிபிளவர் தற்போது ரூ.10 முதல் 20க்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. சாதாரணமாக காலி பிளவர் ரூ.50 முதல் 150 வரை விற்பனை செய்யப்படும். விலை குறைத்து விற்பனை செய்யப்படுவதால், இதனை பெரும்பாலான மக்கள் வாங்கிச் செல்கின்றனர். வெளி மாநிலத்தில் இருந்து கொண்டு வந்து விற்பனை செய்யப்படும் நிலையில், நீலகிரி மாவட்டத்தில் விளையும் காலிபிளவரின்

விலையும் சரிந்து, இதே விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## கிளிகளால் மேரக்காய் விவசாயம் பாதிப்பு

மஞ்சூர் : நீலகிரி மாவட்டம் மஞ்சூர் மற்றும் பெரியார்நகர், மேல்குந்தா உள்பட சுற்றுபுற பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில் மேரக்காய் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதில் விளைவிக்கப்படும் மேரக்காய் அறுவடைக்கு பின் மேட்டுப்பாளையம் பகுதிக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. போதிய மழை பெய்யாததால் மேரக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதுடன் போதிய விலையும் கிடைக்காத நிலை உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மேலும் பெரியார்நகர் உள்ளிட்ட பகுதிகளில் காட்டுயானைகள், காட்டெருமைகள், மான்கள் தொந்தரவுடன் தற்போது கிளிகளாலும் மேரக்காய் விவசாயத்தில் பாதிப்பு ஏற்படுவதாக கவலை தெரிவித்தனர். இதுநாள் வரை மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் கிளிகள் அரிதாக தென்பட்டு வந்தநிலையில் சமீபகாலமாக கிளிகள் அதிகளவில் காணப்படுகிறது. இந்த கிளிகள் மேரக்காய்களை ஆங்காங்கே கடித்தும், கூரிய நகங்களால் கீறியும் வைக்கின்றன. கிளிகள் கூட்டத்திடமிருந்து மேரக்காய்களை பாதுகாக்க வழி தெரியாமல் திண்டாடுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மரக்கன்று நடும் விழா

நெட்டப்பாக்கம் : வில்லியனூர் அடுத்த கோர்க்காடு அரசு மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது. இதில் அமைச்சர்கந்தசாமி கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, மரக்கன்றுகளை பள்ளி வளாகத்தில் நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். முன்னதாக பள்ளி முதல்வர் தனசெல்வம் வரவேற்றார். சுற்றுச்சூழல் கல்வி கழக நிறுவனர் ராமநாதன் கருத்துரை வழங்கினார். அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் துறை இயக்குனர் துவாரகநாத் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். முன்னாள் எம்எல்ஏ நீலகங்காதரன் மற்றும் குமரேசன், வீரமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காலியாக இருக்கும் 8,000 ஏக்கர் ரயில்வே நிலத்தில் விவசாயம் செய்ய அனுமதி

புதுடெல்லி: ரயில்வே அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியதாவது: ரயில்வேயிடம் தற்போது 8859.18 ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. அதிக உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், இந்த காலியிடங்களில் விவசாயம் செய்ய ரயில்வேயின் சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே விதிகள் படி, ரயில்வே நிலங்களின் உரிமம் தனியார் நபர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.



இதன் மூலம் ரயில்வே நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்வது தடுக்கப்படும். தற்போது 930.75 ஹெக்டேர் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. வடக்கு ரயில்வே மண்டலத்தில் மட்டும் 206 ஹெக்டேர் நிலம் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அவர்களை அகற்றுவதற்காக ரயில்வே நிலத்தின் கடைசி எல்லை வரை புதிய ரயில்பாதைகளை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அசாம், ஜார்கண்ட், ஒடிசா, மகாராஷ்டிரா, மபி, உபி, தெலங்கானா, ஆந்திரா, சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களில் கூடுதலாக ரயில்வே பாதை அமைக்கப்படவுள்ளன. நாட்டின் பல இடங்களில் ரூ.24 ஆயிரம் கோடி மதிப்பில் புதிய ரயில் பாதைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. காலியாக உள்ள ரயில்வே இடங்களின் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

தினமணி

## டிசம்பர் 23 - தேசிய விவசாயிகள் தினம்



ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 23-ம் தேதி 'தேசிய விவசாயிகள் தினமாக' கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் பிறந்த நாளே கடந்த 16 ஆண்டுகளாக விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. சரண் சிங்கின் பிறந்த நாளை விவசாயிகள் தினமாக கொண்டாடப்படுவதற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டு.

பல்வேறு நெருக்கடியான அரசியல் சூழல்களுக்கிடையே ஜூலை 1979-ம் ஆண்டு, இந்தியாவின் 5-வது பிரதமராக பதவியேற்றார் சவுத்ரி சரண் சிங். பின்னர் 1980-ம் ஆண்டு ஜனவரி 14-ம் தேதி வரை 7 மாதங்கள் ஆட்சியில் இருந்த சரண் சிங் 'ஜமீன்தாரி ஒழிப்புமுறை சட்ட'த்தை கொண்டு வந்தார். அதேசமயம் நிலச் சுவான்தார்கள், வட்டிக்கு பணம் வழங்குவோர் மீது கடும் எதிர்ப்புகளையும், கண்டனங்களையும், விமர்சனங்களையும் முன்வைத்தவர் சரண்சிங்.

அவருடைய ஆட்சியின்போதே விவசாயிகளின் விளைபொருள் விற்பனைக்காக 'வேளாண் விளைபொருள் சந்தை மசோதா'வையும் அறிமுகப்படுத்தினார். இதுதான் அவர் ஆட்சியின் போது விவசாயிகளின் நலன்களுக்காக கொண்டுவரப்பட்ட முக்கிய அம்சங்கள்.

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயம். உண்மைதான். இன்றும் இந்தியாவின் மக்கள்தொகையில் 60 சதவிகிதத்துக்கு மேலானோர் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். ஆனால் இன்னும் விவசாயம் ஆட்சியாளர்களுக்கு முதன்மை துறையாக இல்லாதிருப்பது வருத்தத்தை அளித்து வருகிறது

## டிச.27இல் பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த பயிற்சி



பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த இலவச பயிற்சி வரும் 27ஆம் தேதி நடைபெறவுள்ளது என நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் என்.அகிலா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 27ஆம் தேதி காலை 9 மணிக்கு மா, பாக்கு, மரவள்ளி மற்றும் காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இப் பயிற்சி முகாமில் மா, பாக்கு, மரவள்ளி மற்றும் காய்கறி ஆகிய பயிர்களின் சாகுபடிக்கேற்ற மண்வளத்தினைக் கண்டறியும் வழிமுறைகள், மண் வளத்தை

மேம்படுத்தும் உத்திகள், மண்வளத்திற்கேற்ற சமச்சீர் உரமிடுதல் பற்றிய தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படும்.
இப் பயிற்சி முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.
விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266650 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 26ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## புதிய காற்றழுத்த தாழ்வு நிலை: கடலோர மாவட்டங்களுக்கு மழைக்கு வாய்ப்பு

வங்கக் கடலில் புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், டிசம்பர் 25, 26 ஆகிய தேதிகளில் கடலோர மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
அந்தமான் அருகே உருவாகிய காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, நகர்ந்து தென் தமிழகத்தை ஒட்டிய மன்னார்வளைகுடா பகுதியில் மையம் கொண்டிருந்தது.
அதனைத் தொடர்ந்து, மேற்கு நோக்கி நகரத் தொடங்கியது.
இதன் காரணமாக தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் மண்மேல்குடியில் 20 மி.மீ. மழை பெய்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:
மேற்கு நோக்கி நகர்ந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது தொடர்ந்து மேற்கு நோக்கி நகர்ந்து, தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிக்குச் சென்றுவிட்டது. இதன் காரணமாக வெள்ளிக்கிழமை தமிழகம், புதுச்சேரியில் வறண்ட வானிலையே நிலவும்.
புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை: இந்த நிலையில் தெற்கு அந்தமான் அருகே புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக தென் தமிழக கடலோர மாவட்டங்களில் டிசம்பர் 25-ஆம் தேதி ஓரிரு இடங்களிலும், டிசம்பர் 26-ஆம் தேதி ஒரு சில இடங்களிலும் மழை பெய்யக்கூடும்.
எனினும் சென்னை உள்ளிட்ட வடதமிழகம், புதுச்சேரியில் தொடர்ந்து வறண்ட வானிலையே நிலவும்.

புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலையின் நகர்வு கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரி அணையில் தொடர்ந்து நீர்மட்டம் உயர்வு

கிருஷ்ணகிரி அணையில் தொடர்ந்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் 5 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விட வாய்ப்பு உள்ளது.

கர்நாடக மாநிலம், பெங்களூரு மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்தது. இதனால் தென்பெண்ணை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்தது. அதன் காரணமாக ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கு அதிக அளவில் தண்ணீர் வந்தது. இதன் காரணமாக கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர், தென்பெண்ணை ஆறு வழியாக கிருஷ்ணகிரி அணையை வந்தடைந்தது.

கிருஷ்ணகிரி அணையின் மொத்தக் கொள்ளளவு 52 அடியாகும். புதன்கிழமை அதன் நீர்மட்டம் 47.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 268 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 106 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. வழக்கமாக, கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் 48 அடியை அடைந்தவுடன், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் தென்பெண்ணையாற்று கரையோரப் பகுதி மக்களுக்கு பொதுப்பணித் துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்படுவது வழக்கம்.

தற்போது பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்யாமல் இருப்பதாலும், நீரின் அளவு முன்பைக் காட்டிலும் குறைவாக வருவதாலும் வெள்ள அபாய எச்சரிக்கை விடலாமா என அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருக்கும் பட்சத்தில் 5 மாவட்ட தென்பெண்ணையாற்று கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## செய்யூர் பனங்கிழங்கு அறுவடை

செய்யூர்: செய்யூர் தாலுகாவில், பல இடங்களில், பனங்கிழங்கு அறுவடை துவங்கியுள்ளது.

மாவட்டத்தில், அதிக பனை மரம் உள்ள பகுதி, செய்யூர் வட்டாரம். இங்கு, பனை மரம் இல்லாத ஊரே இல்லை. என்ன தான் காலம் மாற்றம் ஏற்பட்டாலும், பனங்கிழங்கு மக்கள் மத்தியில் பிரபலம்.
கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டுமே கிடைக்கும், இக்கிழங்கு, சென்னை போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. இங்கிருந்து, அருகில் உள்ள மேல்மருவத்துார் அம்மன் கோவிலுக்கு, வரும் வெளி மாநில பக்தர்கள் இங்கு விற்பனையாகும் பனங்கிழங்கை வாங்கி செல்கின்றனர்.
செய்யூர் பகுதியிலிருந்து, ஒரு கிழங்கு, ஒரு ரூபாய்-க்கு வாங்கிச்சென்று, மற்ற பகுதியில், ஐந்து கிழங்கு, 10 ரூபாய் என, விற்கப்படுகிறது.

விளைவிப்பது எப்படி?
பனை மரம் பல விதங்களில் பயன் தரும் மரம். இதன் அனைத்து பகுதிகளும் பயன்தர கூடியது. பனை மரத்தின் நுங்கு முற்றி, பனம்பழமாக மாறுகிறது. இந்த பழத்தில் ஒரு கொட்டை முதல், மூன்று கொட்டைகள் வரை இருக்கும். இந்த கொட்டைகளை, அரை அடி ஆழத்தில் புதைத்து விடுவர். கொட்டை முளைக்கும் போது உருவாகும் வேர் தான் பனங்கிழங்கு. இது, பக்குவமான கிழங்காக கிடைக்க மூன்று மாதங்களாகும். பருவம் தவறினால், பனை மரமாக முளைத்து விடும்.

## தரமான நிலக்கடலை விதைக்கு தட்டுப்பாடு - செய்யூர் பகுதி விவசாயிகள் தவிப்பு

ஜமீன் எண்டத்துார்: புஞ்சை பயிர் செய்ய துவங்கியுள்ள விவசாயிகள், தரமான நிலக்கடலை விதைகள் கிடைக்காததால் அவதிப்படுகின்றனர். வட கிழக்கு பருவ மழை பொய்த்து விட்ட நிலையில், புஞ்சை பயிர்களான நிலக்கடலையை ஊடுபயிராக சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். அதிக மகசூல் பெற தரமான விதை தேவை. தற்காலிக கடை பாரம்பரியமான விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் விளைவித்த விதைகளை, விதை
நேர்த்தி செய்து பாதுகாத்து வைத்திருந்தனர். சமீப காலமாக, விவசாயிகள் அவ்வாறு விதைகளை சேமித்து வைப்பதில்லை. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொள்ளும் வியாபாரிகள், தரமற்ற விதைகளை, வெளி மாவட்டங்களில் இருந்து வாங்கி வந்து, தற்காலிக கடைகள் அமைத்து, விற்பனை செய்கின்றனர்.

இவர்களிடம் வாங்கும், நிலக்கடலை விதைகள், 50 சதவீதம் மட்டுமே முளைப்பதாக தெரிவிக்கின்றனர். எந்த வியாபாரியிடம் தரமான விதைகள்

விற்கப்படுகிறது என தெரியாமல், விவசாயிகள் தவித்து வருகின்றனர். வேளாண் துறை மற்ற பயறு வகைகளை விற்பனை செய்வது போல, மானிய விலையில் நிலக்கடலையும் விற்பனை செய்யவேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

என்ன செய்யலாம்?

• அரசு, பிற பயறு வகைகளை விற்பனை செய்வது போல், வேளாண் கூடத்தில் நிலக்கடலை விற்பனை செய்ய வேண்டும்

• விவசாயிகள் வெளிச்சந்தையில் வாங்கும் விதைகளை, விதை பரிசோதனை செய்ய வேண்டும்

• பாரம்பரியமான முறை யில் விதை நேர்த்தி செய்து, பாதுகாத்து, பயன்படுத்த வேண்டும்.

வயலில், 7 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளேன். 1 ஏக்கர் சாகுபடி செய்ய, 25 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. 1 ஏக்கருக்கு, 60 கிலோ விதை தேவைப்படும். வெளி மாவட்ட வியாபாரிகள், கிலோ, 120 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். கடந்த ஆண்டு இவர்களிடம் வாங்கிய விதையில், 50 சதவீதம் மட்டுமே முளைத்தது. இதனால், வட்டார விவசாயிகளுக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டது. தற்போது வேறு வழி இல்லாமல், கடவுளை நம்பி, இவர்களிடமே நிலக்கடலை விதை வாங்கி, விதைப்பு செய்துள்ளேன். கோ.அல்லிமுத்து, விவசாயி, ஜமீன் எண்டத்துார்

## வறட்சியிலிருந்து பயிர்களை காப்பாற்ற வழிமுறை: மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தகவல்

கரூர்: வறட்சியிலிருந்து, பயிர்களை காப்பாற்றும் வழிமுறைகள் குறித்து, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அல்தாப் விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: குறைந்த அளவு மண்ணின் ஈரத்தன்மை, அதிக வெப்பநிலை, குறைந்த அளவு காற்றின் ஈரப்பதம், அதிவேக காற்று போன்றவை முக்கிய காரணிகளால் வறட்சி ஏற்படுகிறது. நெற்பயிரில் பூக்கும் பருவத்தில், வறட்சி ஏற்பட்டால் அவற்றின் மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். அதுபோல் பயறு வகைப் பயிர்களில் பூக்கும் பருவத்தில் வறட்சி ஏற்பட்டால் பூக்கும் தன்மையை இழக்கும். காய் பிடிக்கும் பருவத்தில் காய்களின் எண்ணிக்கை குறையும். வறட்சி ஏற்படும்போது பொட்டாசியம் மற்றும் மக்னீசியம் பற்றாக்குறை அதிகம் காணப்படும். இரும்பு, துத்தநாகம், போரான் போன்ற நுண்ணூட்ட சத்துக்களின் பற்றாக்குறையும் ஏற்படும். வளர்ச்சி ஊக்கிகளின் பயன்பாடு, வறட்சி காலத்தில் பயிரின் வளர்ச்சி மகசூலை நிலைநிறுத்த பெரிதும் உதவுகின்றன. வறட்சி காலங்களில் தண்டில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருட்கள் பயிரின் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. 1 சதவீதம்

பொட்டாசிய குளோரைடு அல்லது, 1 சதவீதம் பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் அல்லது, 0.5 சதவீதம் சோடியம் குளோரைடு போன்ற கரைசல்களை பயன்படுத்தும்போது, 15 முதல் 20 நாட்கள் வரை பயிர்கள் வறட்சியை தாங்கி நிற்கும்.

மேலும், 2 சதவீதம் டிஏபி, 2சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை பூக்கும் பருவம், தானியங்கள் உருவாகும் பருவத்தில் தெளிப்பதால் பயிர்கள் வறட்சியை தாங்கும். மேலும் கரும்பு, சோளத்தின் தோகையை நிலப் போர்வையாக பயன்படுத்துவதால், ஈரப்பதம் நிலை நிறுத்தப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில், பி.பி.எப்.எம்., எனும் பாக்டீரியா நுண்ணுயிர் தெளிப்பதன் மூலம், பயிர்களை வறட்சியில் இருந்து பாதுகாக்கலாம். இதுமட்டுமின்றி, விதைகளில், 50 மில்லி திரவ நுண்ணுயிரியல் நன்கு கலந்து, 5 முதல், 10 நிமிடம் நிழலில் உலர்த்தி பின்பு விதைக்க வேண்டும். காலை அல்லது மாலை நேரங்களில், 1 சதவீதம் முதல், 2 சதவீதம் திரவ நுண்ணுயிரை தண்ணீரில் கலந்து, இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். பயிர்களின் முக்கிய வளர்ச்சி காலங்கள் பூ, காய் பிடிக்கும் தருணம் அல்லது, 30 முதல், 45 நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்த வேண்டும். இதனால், நாற்றுகளின் வளர்ச்சி அதிகரிக்கிறது. பழங்கள், காய்கள் மற்றும் விதைகளின் நிறம், தரம் அதிகரிக்கிறது. மகசூல், 10 சதவீதம் அதிகரிக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம்

பெரம்பலூர்: அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகேயுள்ள குருவாடி கிராமத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு அங்கமுத்து தலைமை வகித்தார். சிதம்பரம் கிளையின் வரவு செலவுகளை வாசித்தார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் கிளையின் புதிய நிர்வாகிகளை தேர்வு செய்து கட்சியின் செயல்பாடுகள் திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார்.கூட்டத்தில் குருவாடியில் உள்ள வண்ணான்குட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வார வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

மாத்தூர்-குருவாடி சாலையில் 120 மீட்டர் தூரம் சாலை வேலை நடைபெறாமல் அதற்கான பணத்தை சுருட்ட நினைக்கும் ஒப்பந்தகாரர் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நியாய விலைக்கடைகளில் அனைத்து பொருட்களும் வழங்க வேண்டும். கிணறு மூலம் பயிர் செய்துள்ள விவசாயிகளுக்கு உடன் கடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கொத்து, கொத்தாக காய்த்து குலுங்கும் 'கல் அத்திக்காய்'

தாண்டிக்குடி, தாண்டிக்குடி மலைப்பகுதியில் 'கல் அத்தி' எனப்படும் 'பேய் அத்தி'க்காய்கள் கொத்துக் கொத்தாக காய்த்துக் குலுங்குகின்றன. இம்மலைப்பகுதியின் வனப்பகுதி மற்றும் வேலி ஓரங்களில் கல் அத்தி மரங்கள் நிறைய காணப்படுகின்றன.

ஆண்டுதோறும் அடி முதல் நுனிவரை அதிகப்படியான காய்கள் கொத்து, கொத்தாக காய்ப்பதால் மலைப்பகுதியினர் இதனை 'பேய் அத்தி' என அழைப்பர்.

மருத்துவ ரீதியாக பயன்படும் வகையில் இரும்புச்சத்து, நார்சத்துக்கள் உள்ளன. இருந்தபோதிலும் காய்கள் கடினமாக இருப்பதாலும், மகரந்த சேர்க்கைக்காக ஒருவகை பூச்சி இதை துளையிடுவதால் புழுக்கள் அதிகரித்து இருப்பதாலும் மனிதர்கள் பயன்படுத்துவதில்லை.

மாறாக பறவைகள், குரங்கு உள்ளிட்ட வனவிலங்குகள் இதை இரையாக பயன்படுத்துகின்றன. காலப்போக்கில் இம்மரங்களை விடுதி மற்றும் விழாக்கள் நடைபெறும் நுழைவாயில் பகுதியில் தோரணம் போல நடவுசெய்து அழகுக்காக பராமரிக்கின்றனர்.

இம்மரங்களை ஆய்வு செய்து பழ வகைகளை உற்பத்தி செய்ய தோட்டக்கலை ஆராய்ச்சித்துறை அதிகாரிகள் முன்வரவேண்டும் என, இயற்கை ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## வேப்ப மர கன்றுகளுக்கு இடையே தட்டை பயறு

கீழக்கரை, வேப்ப மரக்கன்றுகளுக்கு ஊடு பயிராக தட்டை பயறு, எள் சாகுபடி செய்து விவசாயி ஒருவர் அசத்துகிறார்.திருப்புல்லாணி அருகே கொட்டியக்காரன் வலசையை சேர்ந்தவர் விவசாயி உமர் நேசன், 62. இவர், தனது இரண்டரை ஏக்கர் விவசாய நிலத்தில் 400 வேப்ப மரக்கன்றுகள் நட்டுள்ளார். ஊடுபயிராக தட்டை பயறு, எள் சாகுபடி செய்துள்ளார். இன்னும் 5 ஆண்டுகளுக்கு பிறகு வளர்ந்து பயன்தரும் வேப்பமரத்தால், ஏராளமான பயன்கிடைக்க உள்ளதாக, பிற விவசாயிகளிடம் விளக்கி வருகிறார். விவசாயி உமர்நேசன் கூறுகையில், 400 வேப்ப மரக்கன்றுகளை தலா 10 ரூபாய் கொடுத்து சுந்தரமுடையான் பழத்தோட்ட பண்ணையில் வாங்கி நடவு செய்துள்ளேன். கடந்த 2 மாதம் முன்பு 15 அடி இடைவெளியில் வேம்பு நடவு செய்யப்பட்டது. இன்னும் 5 ஆண்டுகள் கழித்து கிடைக்கும் இலை, தழைகள், நிலத்திற்கு நல்ல நுண்ணூட்டச்சத்தை வாரிவழங்கும்.ஊடுபயிராக சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு பூச்சி தாக்குதல் இருக்காது. வேப்ப முத்தில் இயற்கை உரம் தயாரிக்கலாம். வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்டது, என்றார்.

## மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்

ஆர்.எஸ்.மங்கலம் ஆர்.எஸ்.மங்கலம் அருகே ஆனந்துாரில் வட்டார வேளா ண்மை விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கான நன்னீர் மீன் வளர்ப்பு கூட்டு பயிற்சி முகாம் நடந்தது.

அப்பகுதியில் உள்ள மாலிக் உசேன் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு பண்ணையில் விவசாயிகளுக்கு கள பயிற்சி அளிக்கப்பட்டது. மீன்வளத்துறை உதவி இயக்குனர் மோதிலால், மீன்களின் வகைகள் குறித்தும், வளர்க்கப்படும் விதங்கள் குறித்தும் விளக்கமளித்தார். மீன்வள ஆய்வாளர் மருதுபாண்டியன், தொழில் நுட்ப மேலாளர்கள் ராம்குமார், முருகானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் அன்னலெட்சுமி நன்றி கூறினார்.

## விவசாயிகள் தினம் பயன்மிகு கண்காட்சி

திருநெல்வேலி விவசாயிகள் தினத்தையொட்டி நெல்லையில் விவசாயப்பொருட்கள், தானியங்கள்,மூலிகை செடிகளின் கண்காட்சி நடந்தது.திருநெல்வேலி சமூக சேவை சங்கத்தின் சார்பில் நேற்று விவசாயிகள் தினத்தையொட்டி,

கண்காட்சி மற்றும் பாராட்டு விழா நெல்லையில் நடந்தது. இயற்கை விவசாயகள் கூட்டமைப்பின் சார்பில்நடந்த நிகழ்வில் மூத்த விவசாய முன்னோடிகள் அந்தோணிசாமி, கோமதிநாயகம் ஆகியோர் பாராட்டி கவுரவிக்கப்பட்டனர்.

ரசாயனத்தை நோக்கி செல்லும் நவீன விவசாயத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பேசிய விவசாயி அந்தோணிசாமி, தமிழருக்கே உரித்த இயற்கை விவசாயத்தை பின்பற்ற வேண்டும். அதில் நிச்சயம் லாபகரமாக உள்ளது எனவும் காலம் காலமாக மக்களை பாதுகாக்கும் என்றார்.

நெல்லை மத்திய சிறை கண்காணிப்பாளர் செந்தாமரைக்கண்ணன், முன்னோடி வங்கி மேலாளர் அழகர்சாமி, ஜோமிக்ஸ் அடிகளார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இயற்கை விவசாயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், உணவுதானியங்கள், வீட்டில் வளர்க்க வேண்டிய மூலிகைசெடிகள் போன்றவற்றின் கண்காட்சி நடந்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு 26–ந்தேதி முதல் நேர்காணல் தர்மபுரி கலெக்டர் தகவல்

கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு வருகிற 26–ந்தேதி முதல் நேர்காணல் நடத்தப்படுகிறது.
இது தொடர்பாக தர்மபுரி மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–
தமிழக கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களுக்கு தர்மபுரி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல், சேலத்தில் வருகிற 26–ந்தேதி (திங்கட்கிழமை) முதல் வருகிற 31–ந்தேதி வரை நடக்கிறது. சேலம் 4–ரோடு சிறுமலர் பள்ளி வளாகத்தில் தினமும் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரையும், மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரையும் இந்த நேர்காணல் நடத்தப்படுகிறது.
தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிக்கு நேர்காணலில் கலந்து கொள்வதற்கான நேர்முகஅழைப்பாணை தனியே அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது. எனவே அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் அழைப்பாணை கடிதம் மற்றும் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் நேர்காணலில் விண்ணப்பதாரர்கள் பங்கேற்கலாம்.

இந்த நேர்காணலுக்கு விண்ணப்பித்து இதுவரை அழைப்பாணை கிடைக்காதவர்கள் நேர்முக அழைப்பாணைகளை தமிழக அரசின் இணையதளத்தில் இருந்து இன்று (வெள்ளிக்கிழமை) வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதேபோல் இன்று மாலை வரை அந்தந்த மண்டல இணை இயக்குனர் அலுவலகங்களிலும் நேர்முக அழைப்பாணைகளை பெற்றுக்கொள்ளலாம். நேர்முக அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத்தேர்வு நடைபெறும் வளாகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்பு, பனங்கிழங்கு விற்பனை மும்முரம்



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல்லில், கரும்பு, பனங்கிழங்கு விற்பனை தொடங்கி உள்ளது.

பொங்கல் பண்டிகை

தமிழர் திருநாள் என்ற சிறப்புக்குரியது பொங்கல் பண்டிகை. இதையொட்டி மாட்டு பொங்கல், காணும் பொங்கல் என அடுத்தடுத்து வரும் நாட்களில் கிராம பகுதிகள் களை கட்டும். பொங்கல் பண்டிகைக்கென கரும்பு, மஞ்சள் கிழங்கு விளைவிக்கப்படுவதும், இவற்றை தவிர்த்து பொங்கல் பண்டிகை கொண்டாட இயலாது என்பதும் இதன் சிறப்பு.

தமிழனின் கலாச்சார பண்டிகை என போற்றுதலுக்குரிய இந்த பண்டிகை வரும் முன்பே கரும்பு, பனங்கிழங்கு போன்றவை விற்பனைக்கு வந்து விடும். அதன்படி திண்டுக்கல் கோட்டைக்குளம் ரோடு, குமரன் பூங்கா அருகில் கரும்பு, பனங்கிழங்கு விற்பனை தொடங்கி உள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு லாரி கரும்பு விற்பனைக்கு கொண்டு வரப்படுவதாக வியாபாரிகள் கூறுகின்றனர். இதுகுறித்து கரும்பு, பனங்கிழங்கு வியாபாரிகள் கூறியதாவது;–

கரும்பு

திண்டுக்கல்லை அடுத்த கொசவபட்டி, சாணார்பட்டி, நத்தம், மேலூர் பகுதிகளில் இருந்து கரும்பு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது ஒரு கட்டு கரும்பு ரூ.300–க்கு விற்பனை ஆகிறது. பொங்கல் பண்டிகைக்கு முன்பு வரத்து அதிகரிக்கும். இருப்பினும் விலை குறைய வாய்ப்பில்லை. தேவை அதிகம் இருப்பதால் ரூ.300–ல் இருந்து கட்டுக்கு ரூ.100 என விலை உயர்ந்து ரூ.400–க்கு விற்பனை ஆகும் சூழ்நிலை உள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நாள்தோறும் 5 லாரி அளவிற்கு கரும்பு விற்பனைக்கு வரும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் வரத்து குறைந்து போனது. மேலும் பணத்தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளுக்கு மொத்தமாக பணத்தை கொடுத்து கரும்பு கொள்முதல் செய்ய முடியவில்லை. இதுபோன்ற பல்வேறு சிரமங்களுக்கு இடையே கரும்பு வியாபாரம் செய்ய வேண்டி உள்ளது.

<u>பனங்கிழங்கு</u>

இதேபோல் திண்டுக்கல்லுக்கு எரியோடு, கோவிலூர் மற்றும் மதுரையில் இருந்து பனங்கிழங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. 1,000 பனங்கிழங்கு கொண்ட ஒரு மூட்டை ரூ.3,500 முதல் ரூ.4 ஆயிரம் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. அவற்றை சிறியது, பெரியது என தரம் பிரித்த பிறகு சில்லறை விற்பனையில் ஒரு பனங்கிழங்கு ரூ.4 முதல் ரூ.5 வரை விற்பனை செய்கிறோம்.
இன்னும் ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பனங்கிழங்கு வரத்தாகும். அதன்பிறகு வரத்து குறைந்து விடும். கடந்த வருடம் நாள்தோறும் 3 மூட்டை பனங்கிழங்கு விற்பனைக்கு வந்தது. ஆனால் இந்த வருடம் 2 நாட்களுக்கு ஒரு மூட்டை தான் விற்பனைக்கு வருகிறது.
இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பெரும்பாறை பகுதியில் மிளகு செடிகளில் மெதுவாடல் நோய் தாக்குதல்

பெரும்பாறை பகுதியில் மிளகு செடிகளில் மெதுவாடல் நோய் தாக்கி வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
<u>மிளகு சாகுபடி</u>
திண்டுக்கல் மாவட்டம் பெரும்பாறை, மஞ்சள்பரப்பு, கொங்கபட்டி, தாண்டிக்குடி, பண்ணைக்காடு, பூலத்தூர், கும்பரையூர், மங்களம்கொம்பு, குப்பமாள்பட்டி, கே.சி.பட்டி, பெரியூர், பாச்சலூர், ஆடலூர், பன்றிமலை, சோலைக்காடு போன்ற கீழ்பழனி மலைப்பகுதிகளில் மிளகு சாகுபடி அதிகம் நடைபெற்று வருகிறது.
மிளகு வாசனைப் பயிர்களிடையே தனிசெல்வாக்குடையது. இந்த மிளகு பயிரை கீழ்பழனி மலை, சிறுமலை மற்றும் மேகமலைப்பகுதியில் அதிகமான பரப்பளவில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.
<u>மெதுவாடல் நோய் தாக்குதல்</u>
மிளகு செடிகளில் அவ்வப்போது பல நோய்கள் தாக்கி பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தற்போது போதிய மழை இல்லாததால், பெரும்பாறை பகுதியில் கீழ்பழனி மலையில் மிளகு செடிகளில் மெதுவாடல் நோய் தாக்குதல் அதிகரித்து

உள்ளது. இந்த நோய் தாக்கிய மிளகு செடியின் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடுகின்றன.
நோய் முற்றிய நிலையில் அனைத்து இலைகளும் மஞ்சள் நிறமாக மாறிய பின் உதிர்ந்து விடுகின்றன. இதன் காரணமாக மிளகு விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் அந்த பகுதியில் மிளகு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## கால்நடை பராமரிப்புத்துறை அலுவலக உதவியாளர் பணிக்கு 26 முதல் 30–ந் தேதி வரை வேலூரில் நேர்காணல் கிருஷ்ணகிரி மாவட்ட விண்ணப்பதாரர்கள் பங்கேற்கலாம்



கால்நடை பராமரிப்புத்துறை அலுவலக உதவியாளர் பணிக்கு வருகிற 26 முதல் 30–ந் தேதி வரை வேலூரில் நேர்காணல் நடக்கிறது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் பங்கேற்கலாம்.
கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் கதிரவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–
<u>அலுவலக உதவியாளர் பணி</u>
கால்நடை பராமரிப்புத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பதவிக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் தேர்வு வேலூர் மண்டலத்தில் வருகிற 26–ந் தேதி முதல் 30–ந் தேதி வரை தினமும் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரையும், 2 மணி முதல் மாலை

6 மணி வரையும் நேதாஜி கலையரங்கம் கோட்டை அருகில், வேலூர் 632 004 என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு நேர்காணலில் கலந்து கொள்வதற்கான நேர்முக அழைப்பாணை தனியே அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள நாளில், அழைப்பாணை கடிதத்துடன் அனைத்து அசல் சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வலைதளத்தில் பதிவிறக்கம்

மேலும் நேர்முக அழைப்பாணை கிடைக்கப்பெறாதவர்கள் நேர்முக அழைப்பாணைகளை – என்ற வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் நேர்முக அழைப்பாணைகளை இன்று (வெள்ளிக்கிழமை) மற்றும் நாளை (சனிக்கிழமை) ஆகிய நாட்களில் அந்தந்த மாவட்ட மண்டல இணை இயக்குனர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நேர்முக அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத் தேர்வு வளாகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் ரூ.65 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

நாமக்கல்லில் நடந்த ஏலத்தில் பருத்தி ரூ.65 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

பருத்தி ஏலம்

நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி, புதுச்சத்திரம் என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 3 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

காசோலை வழங்கப்பட்டது

இந்த பருத்தி ஏறத்தாழ ரூ.65 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரத்து 113 முதல் ரூ.5 ஆயிரத்து 836 வரையும், டி.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.6 ஆயிரத்து 146 முதல் ரூ.6 ஆயிரத்து 799 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம், கரூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

வழக்கமாக இங்கு பருத்தியை விற்பனைக்கு கொண்டு வரும் விவசாயிகளுக்கு பணம் உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். ஆனால் தற்போது நிலவி வரும்

ரூபாய் நோட்டு பிரச்சினை காரணமாக நேற்றும் விவசாயிகளுக்கு பணத்திற்கு பதிலாக காசோலை வழங்கப்பட்டது.

## நீலகிரி மாவட்டத்தில் வறட்சி: ஸ்ட்ராபெர்ரி விளைச்சல் பாதிப்பு



நீலகிரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக ஸ்ட்ராபெர்ரி விளைச்சல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

<u>பழங்கள்</u>

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காய்கறிகள், கொய்மலர்கள் இவற்றிற்கு அடுத்தபடியாக பழங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு நீலகிரி ஆப்பிள், ஆரஞ்சு, பிளம்ஸ், பிச்சீஸ், பெர்சிமன், ஸ்ட்ராபெர்ரி பழங்கள் விளைவிக்கப்படுகிறது.

இந்த பழங்களை பெரும்பாலும் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். மேலும் பழங்களை அறுவடை செய்யும் விவசாயிகள் அவற்றை விற்பனைக்காக ஊட்டி மார்க்கெட்டுக்கு கொண்டு வருகிறார்கள். பின்னர் அவைகளை கேரளா, கோவை உள்ளிட்ட இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>வறட்சி</u>

நீலகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதன் காரணமாகவும், வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதாலும் மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டது. பெரும்பாலான அணைகள், குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதோடு, குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படும் அபாயம் உள்ளது.
ஊட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகள், கோத்தகிரி, கட்டபெட்டு, மைனலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஸ்ட்ராபெர்ரி பழ செடிகளை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் வறட்சி காரணமாக ஸ்ட்ராபெர்ரி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>விளைச்சல் இல்லை</u>

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–
வறட்சியால் ஸ்ட்ராபெர்ரி செடிகளை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் இந்த செடிகளுக்கான நாற்றுகளும் எளிதாக கிடைப்பது இல்லை. தனியாரிடம் இருந்து அதிக விலை கொடுத்து நாற்றுகளை வாங்க வேண்டிய நிலை உள்ளது.
தற்போது வறட்சி காரணமாக 30 சதவீதம் அளவுக்கு கூட ஸ்ட்ராபெர்ரி விளைச்சல் இல்லை. இதனால் நஷ்டம் ஏற்படும் உள்ளது. எனவே விவசாயிகளை பாதுகாக்க ஸ்ட்ராபெர்ரி நாற்றுகளை அரசே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணமும் வழங்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம்-சின்னவெங்காயம் உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்கம்

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம், சின்னவெங்காயம் உற்பத்தியாளர் நிறுவனம் விவசாயிகளுக்காக தொடங்கப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் நிறுவனம்

பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 17 கிராமங்களில் இருந்து 777 விவசாயிகளை உள்ளடக்கிய பெரம்பலூர் மாவட்ட மக்காச்சோளம் மற்றும் சின்ன வெங்காய உற்பத்தியாளர் நிறுவனத்தை செட்டிக் குளம் வெங்காய வணிக வளாகத்தில் மாவட்ட கலெக்டர் நந்தகுமார் மற்றும் மத்திய அரசின் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல் துறையின் பொருளாதார ஆலோசகர் ராஜீவ் மிஸ்ரா ஆகியோர் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

ரூ.20 லட்சத்தில் புதிய கட்டிடம்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் நந்தகுமார் பேசுகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மக்காச்சோளம் மற்றும் சின்ன வெங்காய உற்பத்தியாளர் நிறுவனம் மூலமாக வெங்காயம் மற்றும் மக்காச்சோளம் பயிரிடப்படும் விவசாயிகளிடம் இருந்து வெங்காயம் மற்றும் மக்காச்சோளங்களை கொள்முதல் செய்து, அதனை மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

வெங்காயத்தில் இருந்து மதிப்புக்கூட்டுப் பொருட்கள் தயாரிப்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் இவ்வளாகத்தினுள் புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. கட்டுமானப்பணிகள் நிறைவடைந்ததும் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் வெங்காய மதிப்புக்கூடுதல் செய்யும் எந்திரங்கள் அமைக்கப்பட உள்ளன. இம்மையத்தின் மூலமாக கிடைக்கப் பெறும் லாபம் முழுவதும், இந்நிறுவனத்திற்கே அளிக்கப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் இந்திய பயிர்பதன தொழில்நுட்ப கழகத்தின் இயக்குனர் அனந்தராமகிருஷ்ணன், வேளாண்மை துணை இயக்குனர் அய்யாசாமி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜகோபால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் கொட்டரை நீர்த்தேக்கத்துக்கு நிலம் கொடுத்த 300 பேருக்கு இலவச வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது



பெரம்பலூர் மாவட்டத்தில் கொட்டரை நீர்த்தேக்கத்துக்கு நிலம் கொடுத்த 300 பேருக்கு இலவச வீட்டுமனை வழங்கப்பட்டு உள்ளது என்று கலெக்டர் கூறினார்.

மனுநீதி நிறைவு நாள் விழா

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட கொட்டரை கிராமத்தில் சிறப்பு மனுநீதி நிறைவு நாள் விழா நடந்தது. ஆர்.டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். மாவட்ட கலெக்டர் நந்தகுமார் தலைமை தாங்கி 613 பயனாளிகளுக்கு ரூ.4¼ கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

தமிழக அரசால் கொட்டரை கிராமத்தில் ரூ.108 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் புதிய நீர்த்தேக்க திட்டம் 1159.93 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படவுள்ளது. இதில் 893.39 ஏக்கர் பட்டா நிலங்களாகும், 266.54 ஏக்கர் நிலங்கள் கோவில் மற்றும் புறம்போக்கு நிலங்களாகும்.

கொட்டரை நீர்த்தேக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பொதுமக்கள் முன்வந்து தங்களின் பட்டா நிலங்களை அளித்தது மிகவும் பாராட்டுக்குரியது. தொடர்ந்து கால்வாய்கள் அமைப்பதற்கான நிலங்கள் கையப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றது.

300 பேருக்கு வீட்டுமனை

நீர்ீத்தேக்கத்திற்கான பணிகள் விரைவில் செய்து முடிக்கப்படும். மேலும், இத்திட்டத்திற்காக நிலம் கொடுத்த செங்குணத்தை சேர்ந்த 300 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 1 மாத காலமாக இக்கிராமத்திற்கு வருகை தந்து மக்களிடமிருந்து பல்வேறு வகையான கோரிக்கைகள் அடங்கிய 644 மனுக்கள் பெறப்பட்டு தகுதியுள்ள 74 பேருக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன. மனு அளித்த அனைவருக்கும் ஒரு மாத காலத்திற்குள் தக்க பதில் தொடர்புடைய அலுவலகம் மூலமாக சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர் பேபி, தனித்துணை கலெக்டர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) புஷ்பவதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மோகன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூர்த்தி, வட்டாட்சியர்கள் சீனிவாசன், ஷாஜஹான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரெயிலில் 1,313 டன் பொட்டாஷ் உரம் தஞ்சை வந்தது

தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரெயிலில் 1,313 டன் பொட்டாஷ் உரம் தஞ்சை வந்தது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமும், தனியார் உர விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் அவ்வப்போது உரம் வரவழைக்கப்பட்டு இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நேற்று தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரெயிலில் 21 வேகன்களில் 1,313 டன் பொட்டாஷ் உரம் தஞ்சை வந்தது.

தஞ்சை, நாகை, திருவாரூர்

இந்த உரங்கள் தஞ்சை ரெயில் நிலையத்தில் இருந்து லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களுக்கும், தனியார் சேமிப்பு கிடங்கிற்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

## நுண்ணீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும் தோட்டக்கலைத்துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் கலெக்டர் பேச்சு

நுண்ணீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று

தோட்டக்கலைத்துறை சார்பில் நடந்த கருத்தரங்கில் கலெக்டர் பழனிசாமி பேசினார்.

கருத்தரங்கு

திருச்சியில் தோட்டக்கலைத்துறை சார்பில் நுண்ணீர் பாசனம் குறித்த கருத்தரங்கு கலையரங்க திருமண மண்டபத்தில் நடந்தது. கலெக்டர் பழனிசாமி கருத்தரங்கை தொடங்கி வைத்து, தொழில்நுட்ப கையேட்டை வெளியிட்டார். பின்னர் அவர் பேசியதாவது:-

விவசாயிகள் நுண்ணீர் பாசனத்தினால் குறைந்த அளவு நீரை அதிக பரப்பிற்கு பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கலாம். நுண்ணீர் பாசனம் அமைப்பதில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டி அதிக அளவு பயன்பெற வேண்டும். தமிழ்நாட்டில் சுமார் 1½ லட்சம் எக்டர் பரப்பில் சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்புநீர்ப்பாசனம், மழைத்தூவான்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சேலம், விழுப்புரம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிக பரப்பில் நுண்ணீர்பாசனம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நுண்ணீர் பாசனம்

திருச்சி மாவட்டத்தில் 2015-16-ம் ஆண்டு 1,137 எக்டர் பரப்பளவில் நீர் ஆதாரம் பெறப்பட்டு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. அதேபோல் இந்த 2016-17-ம் ஆண்டு 537 எக்டர் பரப்பளவிற்கு நிதி ஆதாரம் பெறப்பட்டு விவசாயிகள் தேர்வு செய்து சொட்டு நீர் பாசன அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கருத்தரங்கில் நீர்பாசன மேலாண்மைத்துறை ஓய்வுபெற்ற பேராசிரியர் சீனிவாசன், குமுளூர் வேளாண் கல்லூரி பேராசிரியர் லலிதா, நவலூர் குட்டப்பட்டு தோட்டக்கலைக் கல்லூரி பேராசிரியர் ஈஸ்வரன் மற்றும் மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி, துறையூர், தாத்தையங்கார்பேட்டை, தொட்டியம், மண்ணச்சநல்லூர் மற்றும் புள்ளம்பாடி வட்டாரங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## அழிந்துவரும் விவசாய கருவிகளில் நிலைத்து நிற்கும் மண்வெட்டி


கீரமங்கலத்தில் வயலுக்கு வரப்பு வெட்டும் விவசாயி.

**இன்று உலக விவசாயிகள் தினம்**

பல்வேறு மாற்றங்களால் வேளாண் கருவிகள் அழிந்துவரும் நிலையில் மாற்றமின்றி நிலைத்து நிற்கும் கருவியாக மண்வெட்டி உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயத்தையே முதுகெலும்பாகக் கொண்டுள்ள நம் நாட்டில் பாரம்பரியமாக கலப்பை, மண் வெட்டி, ஏற்றம் என பல்வேறு கருவிகள் விவசாயத்துக்குப் பயன் படுத்தப்பட்டன.

மழை குறைவு, இடுபொருட்கள் விலை உயர்வு, ஆள் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் நம் கண்முன்னே விவசாயத்தின் பரப்பளவு நாளுக்கு நாள் குறைந்து வருவதை அறிய முடிகிறது.

இந்நிலையில், விவசாயத்தில் டிராக்டர்களின் பயன்பாடு அதிகரித் ததால் ஏர் பூட்டி உழுவது குறைந்துவிட்டது. இதேபோல உழவு, விதைப்பு, நடவு, அறுவடை என பெரும்பாலான பணிகள் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை முற்றிலுமாக இயந் திரமயமாக்குவதற்காக, அரசும் கோடிக்கணக்கில் மானியத் திட்டங்களைச் செயல்படுத்தி வரு கிறது.

விவசாயத்தில் பல்வேறு வேளாண் கருவிகள் வந்திருந் தாலும் விவசாயியின் தனித்திற மையை வெளிப்படுத்தும் விதமாக உள்ள மண்வெட்டிக்கு மாற்றாக எதுவும் வரவில்லை.

அந்த அளவுக்கு பாரம்பரியமாக விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வரும் கருவிகளில் ஒன்றாக மண்வெட்டி உள்ளது என விவசாயிகள் கூறுகின்றனர்.

**எஞ்சியுள்ள முக்கிய கருவி**

இதுகுறித்து கீரமங்கலத்தைச் சேர்ந்த விவசாயி கே.பன்னீர் என்ற செல்வராஜ் கூறியபோது, “பாரம்பரியமாகவே மண்வெட்டி களைப் பயன்படுத்தி வரப்பு வெட் டுதல், வாய்க்கால் அமைத்தல், குழி பறித்தல், கிணறு வெட்டு தல் போன்ற பணிகள் மேற்கொள் ளப்படுகின்றன. கலப்பை, மண் வெட்டி போன்ற கருவிகளோடு மாடுகளை வளர்க்கும் குடும்பம் தான் விவசாயக் குடும்பமாக கருதப்பட்டது.

ஆனால், தற்போது மாடு, கலப்பை இவைகளெல்லாம் விவ சாயப் பணிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் விலகி யதையடுத்து, பாரம்பரியமாக பயன்படுத்தி வந்த கருவிகளில் தற்போது எஞ்சி இருக்கும் முக்கியக் கருவிகளில் ஒன்றாக மண்வெட்டி உள்ளது.

ஒரு வருடத்துக்கு ஒரு மண்வெட்டியைக் கொண்டு வேலை செய்தே அதை தேய்த்துவிடுவோம். மண்வெட்டி பிடித்து வேலை செய்து பழகிவிட்டால் எவ்வளவு நேரம் வேலை செய்தாலும் அலுப்பு தெரியாது.

இந்தக் கருவிதான் தற்போது விவசாயத்தை தாங்கி நிற்கிறது. இந்தக் கருவி இருக்கும் வீடுதான் விவசாயியின் அடையாளமாக திகழ்கிறது. எனவே, இந்தக் கருவி வீடுகளில் பயன்பாடின்றி முடங்கினால் அது விவசாயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலமாக மாறும்” என்றார்.

**விவசாயத்தின் அளவுகோல்**

இதுகுறித்து மண்வெட்டி தயாரிக்கும் தொழிலாளி கீரமங்கலத்தைச் சேர்ந்த முருகன் கூறியபோது, “முன்னர் உழவுக்கான மரக்கலப்பைகள் அதிகமாக தயாரித்து வந்தோம். தற்போது டிராக்டர்களின் வருகையால் மரக்கலப்பைகள் தயாரிக்கப்படுவதில்லை.



**ரூ.600-க்கு விற்பனை**

மற்ற கருவிகளுடன் ஒப்பிடும்போது, மண்வெட்டி அதிக எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒரு மண்வெட்டியை ரூ.600-க்கு விற்பனை செய்கிறோம். மண்வெட்டிகளைத் தற்போதைய இளைஞர்களும் பயன்படுத்தி வருவதால் அவ்வளவு எளிதில் இது வழக்கொழிந்து போய்விடாது. விவசாயமும் ஓரளவுக்கு நிலைத் திருக்கும். மண்வெட்டிதான் விவசாயத்தின் அளவுகோலாகப் பார்க்கப்படுகிறது” என்றார்.